விநாயகர் அகவல்

காரியசித்தி மாலை







கணபதி மூல மந்திரம்

"ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம்
கம் கணபதயே வர வரத,
ஸர்வ ஜனம்மே வசமானாய ஸ்வாஹா"

பொருள்: மகா கணபதி சுத்தப் பிரம்மம். லெக்ஷ்மி நாராயண கௌரி கிரிச ரதி மன்மத பூமிதேவி வராக மூர்த்தி தத்துவங்களை விளக்கு கின்றன. கடவுள் வடிவமான கணபதிக்கு வணக்கம். மேம்பட்டவரே, பக்தர்கள் விரும்பியவற்றை அருள்பவரே. எல்லா உயிர்களையும் எனக்கு வசப்படுத்துவாயாக.

கணபதி காயத்திரி;-

"ஓம் தத்புருஷாய வித்மஹே.
வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி, ப்ரசோத யாத்"

கணபதி தியான ஸ்லோகங்கள்

"சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
பிரசன்ன வதனம் த்யாயேத் ஸர்விக்னோப சாந்தயே:
வாகீசாத்யா ஸும நஸ: ஸர்வார்த்தா நாமுபக்ரமே
யம் நத்வா க்ருத்க்ருயாஸ் யுஸ்தம் நமாகமி ஜானனம்
ஸர்வ விக்ன ஹரம் தேவம் ஸர்வ விக்ன விவர்ஜிதம்
ஸர்வ சித்தி ப்ரதாகாரம் வந்தே (அ) ஹம் கண நாயகம்

மூஷிக வாஹன, மோதக ஹஸ்த சாமர கர்ண

விளம்பித் ஸூத்ர

வாமந ரூப, மஹேஸ்வர புத்ர, விக்ன விநாயக பாத

நமஸ்தே

ஃ ஃ ஃ

கஜானம் பூத கணாதி ஸேவிதம் கபித்த

ஜம்பூபலஸார பக்ஷிதம்

உமாஸூதம் சோக விநாச காரணம் நமாமி

விக்னேஸ்வர பாத பங்கஜம்:

"நமோ நமோ கணேசாய நமஸ்தே விஸ்வ ரூபிணே
நிர்விக்னம் குருமே தேவ நமாமித்வாம் கஜானனம்
அகஜானன் பத்மார்க்கம் கஜான்ன மஹர்நிசம்
அநேக தந்தம் பக்தானாம் ஏகதந்தம் உபாஸ்மஸே
நமஸ்தே பின்ன தந்தாய நமஸ்தே-ஹரஸூனவே
மமா பீஷ்ட ப்ரதோ தேவ விநாயக நமோ ஸ்துதே
வக்ர துண்ட மஹாகாய: கோடி சூர்ய ஸமப்ரபா
நிர்விக்னம் குருமே தேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா"

உ

சிவமயம்.

ஔவையார் அருளிய

விநாயகர் அகவல்

(பொருளுரையுடன்)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப் 4

குளிர்ச்சி பொருந்திய நறுமணக் கலவைச்சந்தனம் அணிந்த செந்தாமரை மலர் போன்றுசிவந்து விளங்கும் அழகிய திருவடிகளில் அணியப்பெற்ற அணிகலனான சிலம்பு, பலவிதமானஇசையோடு கூடிய ஓசைகளைக் கொண்டு ஒலிக்கவும், பொன்னால் செய்யப் பெற்ற 'அரைஞாண்' என்னும்அணிகலமும், பூ வேலை செய்யப் பெற்ற மெல்லிய வெண்பட்டாடையும், அழகிய இடுப்பிலே; காணக்காண அழகு மென்மேலும் ஒளி வீசவும்;

பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும் 8

சகல உலகங்களையும் தன்னுள் அடக்கியிருக்கிறபெருமை வாய்ந்த திரு வயிறும்;மிகப் பருத்த கனமான ஒற்றைக் கொம்பும்யானை முகமும், அதில் திகழ்கின்ற செந்தூரப் பொட்டும்; கொம்பு தாங்கிய திருக்கையால் படைத்தலையும், மோதகம்ஏந்திய திருக்கையால் காத்தலையும், அங்குசம்பிடித்த திருக்கையால் அழித்தலையும், பாசம் வைத்துள்ள திருக்கையால் மறைத்தலையும் அமிர்த கலசம்கொண்ட திருக்கையால் அருளுதலையும் கொண்டஐந்து திருக்கைகளும்; யானையை ஓட்டும்தோட்டி என்ற ஆயுதத்தை வலக் கரத்திலும், கட்டுக்கயிற்றை இடக் கரத்திலும் கொண்டு; என் மனத்தில் எப்போதும்நிலைத்து நிற்கும்,நீல நிறங் கொண்ட திருமேனியும்

நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழ்ஒளி மார்பும் 12

தொங்குகின்ற திருவாயும், நான்கு பெரிய திருத்தோள்களும், சூரியன், சந்திரன், அக்கினி என்ற மூன்று கண்களும், கன்ன மதம், கைம்மதம், கோச மதம் ஆகிய மூன்று மதங்களைப் (இன்ப நீர்) பொழிதலால் உண்டாகிய தழும்பும், ஆன்மாக்களை மலவாதனை தாக்காமல் பாதுகாத்து வீசி வினை வெப்பத்தைப் போக்கும் இரு பெரிய காதுகளும், இரத்தினக் கற்கள் பதிக்கப் பெற்றுச்சிரசில் விளங்குகின்ற பொற் கிரீடமும்; திரட்சியாக முறுக்கப் பெற்ற மூன்று வடங்களைக்கொண்ட பூணூல் விளங்கும் ஒளி பொருந்திய அழகிய திரு மார்பும்;

சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித் *16*

சொல், பொருள் ஆகிய நிலைகளைக் கடந்து, அதீதமாக உள்ள, உருவத்திற்கும் அப்பால் மெய்ஞ்ஞானவடிவினை உடைய; அற்புதத் தன்மைகள்கொண்ட சிவபெருமான் பெற்றருளிய; நினைத்தவுடன் வேண்டுவார்க்குவேண்டும் வரங்களை அளித்தருளும் கற்பக விருட்சம் போன்று விளங்கும் யானைமுகப் பெருமானே!வாழை, மா, பலா என்ற முக்கனிகளை மிக விருப்போடு ஏற்றருளுபவனே; பெருச்சாளியை வாகனமாகக் கொண்ட விநாயகக் கடவுளே! பக்குவம் இல்லாத அடியேனை இச் சமயத்தில் மெய்யடியனாக ஆட்கொண்டருள விரும்பி;

தாயாய் எனக்குத் தானெழுந்து அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து:

பேரன்பு காட்டும் கருணைத் தாய் போலத் தாமாக வேஎன்னிடம் வந்து; பிறப்பும் இறப்புமாகி ஒழியாது வந்து கொண்டே இருக்கும் இப் பிறவியில், மண், பெண், பொன் என்ற ஆசை மயக்கங்களை அடியோடு ஒழித்துத் திருந்தும் பொருட்டு;வேதம் சிவ ஆகமங்களுக்கு முதலாக உள்ள பிரணவத்துடன் கூடிய "ஓம் சிவய நம" என்ற சூக்குமத் திரு ஐந்தெழுத்தைமிகத் தெளிவாக அடியேனுடைய மனத்திலே பதியுமாறு பொருந்தவும்; தேவரீர் அடியேனின் சித்தத்தில் எழுந்தருளி அருள் புரிய;

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே 24

இந்தப் பூவுலகில்; அஞ்ஞானத்தை ஓட்டி மெய் ஞானத்தைப் புகட்டும் ஞானாசாரியராய தேவரீரே அடியவன் முன் எழுந்தருளி; எளியேன்தலைமீது திருவடி தீட்சையாக உமது பாத மலரைச்சூட்டி; உறுதியான பக்குவ நிலைக்குரிய உண்மைப் பொருள் இத்திருவடி தீட்சையே;என்று, இனி இப் பிறவித் துன்பத்தில் உழன்று வருந்தா வகைக்கு உரிய நிலையை எந்தனுக்கு மகிழ்வோடு செய்து அருளியதும்; ஒடிந்த தந்தமாகிய ஆயுதத்தால் என் கொடிய வல்வினைகளைப் போக்கி

உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உ்பாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக் 28

வெறுப்பு இல்லாத மந்திர உபதேசம் எளியேனது வலக்காதில் உபதேசித்து, தெவிட்டுதல் இல்லாததெளிவு பொருந்திய ஞானத்தையும் என் வாழ்வில்காணும்படி செய்து; உணர்ச்சி, சுவை, ஒளி, வாசனை, ஓசை என்ற ஐந்து புலன் அறிவுகளையும் கட்டுப்படுத்தும் தந்திரத்தையும்; இன்பத்தைஅடைவதற்குக்காரணமான தனது பேரருளினாலே; அடியேனுக்கு இனிமையாகத் தெரிவித்து;

கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே 32

உடலில் உள்ள ஆன்ம தத்துவங்கள், வித்தியா தத்துவங்கள் சிவ தத்துவங்கள் ஆகியவற்றை உலக விஷயங்களில் செல்லாது தியான நிலைக்கு ஏற்ப ஒடுங்குதற்குரிய வழிவகைகளை அடியேனுக்குத் தெளியும்படி அறிவித்து; நல்வினை, தீவினைகளாகிய புண்ணிய பாவச் செயல்களின் தொடர்பை நீக்கி; ஆணவ இருளையும் அதன் வலி கெடச் செய்து; ஒப்பற்றஞான சாதனத்தின் உட் பிரிவுகளாகிய ஞான நூல் கேட்டல், சிந்தித்தல்; தெளிதல்; நிட்டை கூடல்;என்ற நான்கு படி முறைகளையும் நான் அடையுமாறு எனக்குத் தந்தருளி,

ஆணவம், மாயை, கன்மம் என்ற மும்மலங்களின் பிணிப்பாகிய மயக்கத்தைப் போக்கி;

ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்

ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி

ஆறா தாரத்து அங்கிசை நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே 36

உடம்பிலுள்ள இரு கண்கள்; இரு செவிகள்; இரு நாசிகள்; வாய், குதம், குறி ஆகிய ஒன்பது வழிகளையும்; மெய், வாய், கண், மூக்கு, செவிஆகிய ஐம் புலன்களையும்; ஒப்பற்ற ஓங்கார மந்திரத்தால் தடுப்பதையும் காண்பித்துஉடலிலுள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம்,அநாகதம்,விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறு ஆதாரங்களிலும் மேலாக; உயர்ந்த துவாத சாந்த மாகியநிலையினையும்; பெரும் பயனாக நிலை பெறச் செய்து மோன நிலையில் அடியேனை இருத்தி;

15

இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

இடை, பிங்கலை என்ற இரு நாடிகளின் இலக்கணத்தை எனக்குச் சந்தேகமின்றி உணர்த்தி, இவ்விரண்டு நாடிகளில் சஞ்சரிக்கும் பிராணனைச் சுழுமுனை நாடியில் செலுத்தவும், அதன் மூலம் ஆறு ஆதாரங்களின் வழியே,தலையிலுள்ள சஹஸ்ராரத்தில் செலுத்தவும் வல்ல உரிய முறை; இவற்றின் இயல்பு, ஆற்றல் இவற்றைத் தெளிவாக அடியேன் அறியும்படி அறிவித்து, அக்னி,

சூரியன், சந்திரன் என்னும் மும்மண்டலங்களிலும்முட்டிச் செல்லும் தூண் போன்றுள்ளதும், மூலாதாரத்தில்அக்கினி மண்டலத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் பாம்பு சீறி எழுவது போன்றுள்ளதும்,

குண்டலி யதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே *44*

நெருப்புச் சுவாலையை ஒத்ததான குண்டலினி சக்தியையும்; சுழுமுனை வாயிலில் இடை, பிங்கலை நாடிகளிலிருந்த பிராண வாயுவையும் ஆன்மாவுடன்

மந்திரத்தை (அசபா மந்திரம் =ஓரெழுத்து ஒரு மொழி.இது எல்லா மந்திரங்களுக்கும் அடிப்படையானதாகும். முழு முதற் தெய்வமாம் சிவபெருமானைக் குறிப்பதாகும். வரி வடிவில் காட்ட இயலாதது. இந்த ஒலி, உணர்வில் தோன்றுவதன்றி உறுப்பில் தோன்றுவதன்று)உரக்கச் சொல்லி, இவ்வாறு குண்டலினி சக்தியை எழுப்புகின்ற முறையை அறிவித்து அருளினீர்.

அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச் 48

அமுது ஊற்றெடுக்கும் இடமான சஹஸ்ராரத்தையும்,சூரிய மண்டலப் பிரதேசமான இதயத்தின் இயல்பினையும், சந்திர மண்டலத்தன்மைகளையும் கூறி, ஆறு ஆதாரச் சக்கரங்கள்சஹஸ்ராரம், லலாடத்தில் பிந்து. ஆக எட்டும், பிந்துவுக்கு மேல் அர்த்த சந்திரன், ரோதினி,நாதம், நாதாந்தம், சக்தி, வ்யாபிகா, ஸமனா, உன்மனா எனப்படும் மற்றொரு எட்டு, ஆகப்பதினாறு நிலைகள், சூரிய சந்திர நாடிகள் இவற்றின் மத்தியிலுள்ள 'ஸுஷும்னா' எனப்படும் 'சுழுமுனை நாடி' இவற்றையெல்லாம் தெளிவு பெறக் காட்டி அருளினீர்

சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்

கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித்து எனக்கருள் செய்து.

ஆறு அளவுகளோடு கூடியதான தூல சரீரம்,நான்கு அளவுகளுடன் கூடிய சூக்கும சரீரம்,ஆகிய இவற்றின் இயல்புகளையும், நான் நினைத்துப்பார்க்க ஏற்ற வகையில் இனிமையாக விளக்கிஅருளி, சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம், புத்தி, மனம்ஆங்காரம் ஆகிய தன் மாத்திரை களாலான சூக்கும சரீரத்தை அடியேன் உணருமாறு மேற்கூறிய எட்டு நிலைகளையும்எனக்குத் தெரிசனப் படுத்தி, மனத்தினால் சஹஸ்ரார சக்கரத்தின் வாயிலையும் காட்டி அருளி,தத்துவ ஞானத்தைப் பெறவும், அடியேன் யோக,நிலையில் இருந்து சமாதி நிலையில் இனிமையாகப்பேரானந்த நிலையை அனுபவிக்கு மாறும் திருவருள்புரிந்தீர்.

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டும் ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து. 61

விநாயகப் பெருமானே! அடியேனைத் தொடர்ந்துவரும் ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் என்னும் மூவகைப்பட்ட பழவினைகளின் வேரை முழுதும் களைந்து; வாக்கும் மனமும் கடந்த ஒருமித்த சமாதி நிலையில் தத்துவங்கள் அனைத்தையும் ஒடுக்கி; காமம், வெகுளி, மயக்கங்களாகிய சித்த மலங்களைப் போக்கி மனத்தைத் தூய்மைப் படுத்தி;(அறியாமை) இருள், (அறிவு) வெளி என்னும்

இரண்டற்றதும் ஒன்றே;ஆனதுமான முடிவிடம் என்று சொல்லுவது போல் அடியேன் செவியில் திருவருட் பேற்றைத் தரும் சிவானந்த வெள்ளத்தில், மூழ்கும் வண்ணம் உபதேசித்து; வரம்பு இல்லாத சிவானந்த சுகத்தை வழங்கி;

அல்லல் களைந்தே அருள் வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி 64

என் துன்பங்களைப் போக்கி; சித்தி தரும் பக்தி வழியைஉணர்த்தி; நாதப் பிரும்மத்தில் அடியேன் மூழ்கிசதாசிவத் தத்துவத்தை உணருமாறு செய்து;அகத்தே ஆத்ம சொரூபம் சிவலிங்கமாக விளங்குவதையும் நீ காட்ட உணர்ந்தேன். (என்னுள்ளேயே சிவசொரூபத்தை உணர்த்தினாய்)

அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி;
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடு மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி 68

அணுவுக்கும் (மிகச் சிறிய பொருளுக்கும்)மிகச் சிறிய பொருளாகவும்; மிகப் பெரியபொருளுக்கும் மிகமிகப் பெரிய பொருளாக, அண்டங்கள் எல்லாவற்றிற்கும் அப்பால் பெரிதாகப் பரந்து விளங்கும் தன்மை உள்ளவராகவும்; முதிர்ந்து பக்குவப்பட்ட கரும்பினுள்ளே முழுமையான ரசமாகத்தித்திக்கின்ற உன் பேரருளையும் பெரும் சக்தியையும்பேருண்மையையும் உணர்ந்தேன். சிவ வேடத்தின் பொலிவையும், பெருமையையும், தூய்மையையும் மேலான செல்வமாகிய திருநீற்றின் மகிமை யையும் நான் உணர்ந்து உய்யுமாறுசெய்து; நல்ல

பெருமை சொல்லவும் அரிதே'என்பதை உணர்ந்து; சிவனடியார் திருக்கூட்டத்தோடு சேர்ந்து தொண்டு செய்ய என்னை ஆளாக்கி விட்டீர்.

அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலைய்யைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே. 72

பஞ்சாட்சர மந்திர மாகிய 'சிவாய நம' என்ற திரு ஐந்தெழுத்தின் அறிய பொருளை அடியேன் உள்ளத்தில் உணர்வு பூர்வமாகஉணர்த்தி; சிவ தத்துவ மெய் ஞானத்தின் மேன்மையைஅறியச் செய்து; அடியேனை ஆட்கொண்டருளிய ஞானவிநாயகப் பெருமானே! நறு மணம் கமழும் உம்முடைய திருவடிகளை அடியேன் தொழுது சரணடைகின்றேன். இம்மை மறுமை நலன்களை அருள்வீராக.

காசிப முனிவர் அருளிச் செய்த

காரிய சித்தி மாலை

நூல்

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து சுரக்குமோ
சந்த மறைஆ கமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம் *1*

ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
விலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்?
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.
இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச் செய்யும்

கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும்அத்
தடவுமருப்புக் கணபதி பொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.
மூர்த்தியாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்த றியாத்
திறத்தி னானும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்
வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விளங்குபர

நாத முடிவில் வீற்றிருக்கும்

நாதன் எவன்எண் குணன்எவன்அப்

போத முதலைக் கணபதியைப்

புகழ்ந்து சரணம் அடைகின்றோம்

மண்ணின் ஓர்ஐங் குணமாகி

வதிவான் எவன்நீர் இடைநான்காய்

நண்ணி அமர்வான் எவன்தீயின்

மூன்றாய் நவில்வான் எவன்வளியின்

எண்ணும் இரண்டு குணமாகி

இயைவான் எவன்வான் இடைஒன்றாம்

அண்ணல் எவன் அக் கணபதியை

அன்பிற் சரணம் அடைகின்றோம்

பாச அறிவில் பசு அறிவில்

பற்றற் கரிய பரன்யாவன்?

பாச அறிவும் பசு அறிவும்

பயிலப் பணிக்கும் அவன் யாவன்?

பாச அறிவும் பசு அறிவும்

பாற்றி மேலாம் அறிவான


தேசன் எவன் அக் அக்கணபதியைத்

திகழச் சரணம் அடைகின்றோம்.

நூற்பயன்

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினமும்மைச்
சந்தி களில்தோத் திரஞ்செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மதிழச் சுகம்பெறும்எண்
தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர் எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும்.
திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ்ஒரு பான் முறையோர்தில்
தங்கும் அரச வசியமாம்

தயங்க இருபத் தொருமுறைமை
பொங்கும் உழுவ லால் கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச் செப்பினர் மறைந்தார்.



பாராயணப் பதிப்பு

C. N. நாச்சியப்பன்

தயாரிப்பு



விநாயகர் அகவல்

(பொருளுரையுடன்)

விலை ரூ. 1-25